# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

---

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

### இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

## முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்

ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்”பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# ஏகன் அநேகன்

## *Many Faces Of The Divine Civam*

அகல்யா தர்மலிங்கம் (முனைவர் பட்ட ஆய்வாளர்), பேராசிரியர்.முனைவர். இராசேந்திரன் முனியாண்டி
முனைவர் சில்லாழி கந்தசாமி
இந்திய ஆய்வியல் துறை, மலாயா பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்:**

தொன்று தொட்டே இப்புவி கண்ட அறிவுசால் குமுகாயம் ஒவ்வொன்றும் தனக்கு அறிந்தவாறு தொடர்ந்து இறையியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது. அதில் செந்தமிழ் சைவர் அளப்பெரும் பங்கு ஏற்றவர்கள். குறிப்பாக இறைவன் எண்ணிக்கையில் எதனை என்ற ஐயமோ காலத்தை விஞ்சியதாகவே இருந்துவருகின்றது. தற்போது நாம் வாழும் நவீன உலகத்தில் இறையியல் பல புதிய கருத்தியல்களை முன் வைத்து வருகின்றது. இந்த ஆய்வு கட்டுரை திருமுறை மற்றும் சைவ சித்தாந்த மெய்கண்ட நூல்களின் அடிப்படையில் இறைவன் எத்தனை என்றும், அவரது பலவகையான கலப்பு நிலைகளையும் விவரிக்கின்றது. தவிர, ஆதித் தமிழரின் வழக்கம் என்று சொல்லப்படும் பலதெய்வக் கொள்கையினைச் சைவ சமய அடிப்படையில் அணுகியுள்ளது. இறைவனின் வியாபகம் உலகப்பொருள்கள் யாவிலும் இரண்டறக் கலந்திருந்தாலும், பரம்பொருளுக்கும் உலக பொருள்களுக்கும் உயிர்களுக்குமான வேறுபாட்டினை இக்கட்டுரை தெளிவுபடுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** சைவ சமயம், ஏகன், ஒருவன், இறைவன் ஒன்று

***Abstract;***

Every intellectual population has probed theology ever since the beginning of the time through various ways within their capacity. Predominantly, the number of supreme beings has obtained hefty attention. This research paper describes the number of Gods and His various composite states based on Tirumurais and Siddhanta Saiva Meikanta texts. Moreover, this research also tackles the polytheism ideology which is associated with Tamil society in the context of Siddhanta Saivam. This study also explains the omnipresence aspect of God within all subjects of this cosmological realm. It attempts to clarify the difference between God and his presence within the worldly articles.

Keywords: Saivism, Siddhanta Saivam, God is one, Pati

**முன்னுரை**

சைவம் என்பது சிவத்தோடு தொடர்புற்று நிற்றல் என்றும் சிவநெறி என்பது உயிர் சிவனது அடிமை என்று உணர்ந்து அச்சிவனைச் சார்ந்து நிற்றல் என்றும் திருமந்திரம் குறிப்பிடும் (திருமந்திரம், தந்:5:15:1). எனவே செந்தமிழ்ச் சைவநெறி கடவுளுக்கு இட்டப் பெயர் சிவம் எனத் தெளியலாம். இக்கருத்தினை நான்காம் திருமுறையில் திருவதிகை வீரட்டானப் பதிகத்தில், "சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்" என்று திருநாவுக்கரசு அடிகள் மேலும் உறுதிப்படுத்துவார் (திரு.4, பதி:112: பா.9).

**1. சிவமே உலகிற்கு முதலாகிறது**

ஆதி முதலாகிய பரம்பொருளின் துணைக்கொண்டே உலகம் தோன்றிற்று என்பதனை "ஆதிபகவன் முதற்றே உலகு" என்பார் ஐயன் திருவள்ளுவர் (திருக்குறள், அதி:1:1). "போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்" என்று திருவெம்பாவையில் உயிர்கள் உலகில் இடம் பெறுவதற்குப் பரம்பொருளான சிவபெருமானே முதலில் அருள்புரிந்தான் என்று மணிவாசகர் குறிப்பிடுவார் (திருவெம்பாவை, பா.20). எல்லா உலகங்களில் உள்ள உயிர்களும் அருமையான சிவப் பரம்பொருளைப் போற்றுதற்கு உரியன என்பதனை, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்" என்று பெரிய புராணத்தில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவார் (பெரிய புரா. பாடல்:1).

பரம்பொருள் கற்பனைக்கு எட்டாத அருவநிலையிலும் ஒளிவடிவாகிய சோதி வடிவாகிய அருவுருவ நிலயிலும் நடவரசர் எனும் உருவநிலையிலும் உயிர்களின் மீது கொண்ட கருணையின் விளைவாக அறிவு வெளியாகிய தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல் வல்லானாகப் பொதுவில் நடம் புரிகின்றான் என்பதனை,

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

(தில்லைவாழந்தணர் புராணம், பா.2)

தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

**2. சிவமே அனைத்தையும் இயக்குகின்றது**

பல்வேறு உலகங்களில் வாழ்கின்ற எல்லா உயிர்களிலும் இறைவன் தங்கி இருந்து அருள்புரிகிறான். அவன் உயிர்களில் தங்கி இருக்கும் வகையால் ஒன்றாயும் உயிர்களைச்

செலுத்தும் வகையால் உடனாயும் பொருள் தன்மையால் உயிர் வேறு இறைவன் வேறு என்று வேறுபட்டும் நின்று அருளுகின்றான் என்பதை.

“போற்றிசைத்து இன்னுயிர் மன்னும் புனிதனை,
நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை,
மேற்றிசைக்குள் தென்திசைக்கு ஒரு வேந்தனாம்,
கூற்று உதைத் தானையான் கூறுகின்றேனே”
(திருமந்திரம்:கடவுள் வாழ்த்து,பா:2)

என்பார் திருமூலர். அன்றாட வாழ்வில் எல்லா உயிர் வகைகளும் இயற்றும் அனைத்து செயல்களுக்கும் பரம்பொருளான சிவனே துணை நிற்கின்றான். சிவனே உயிரற்ற எல்லா பொருள்களையும் உயிர்கள் பயன் பெறும் பொருட்டு இசைவிக்கின்றான். இப்படி உயிர்களிலும் நீக்கம் அற நின்று அனைத்தையும் சிவன் நிகழ்த்துவித்த போதும் உயிர்களாலோ உலகப் பொருள்களாலோ அழுக்கு அடையாதத் தூயவனாகச் சிவன் இருக்கின்றான். அத்தகைய உயர்ந்த பரம்பொருள் ஏகன் அல்லது ஒருவனே என்று திருமூலர் குறிப்பிடுகின்றார்.

### 3. சிவம் எனும் பரம்பொருள் ஒன்றே

செந்தமிழ்ச் சைவர்களுக்குப் பரம்பொருள் ஒன்றே என்ற செய்தியினை மூவாயிரம் தமிழ் மந்திரங்கள் அருளிய திருமூலர் குறிப்பிடுகின்றார். பரம்பொருளான சிவம் தனது சிறப்பு நிலையில் ஒன்றாகத்தான் இருக்கின்றது. பின்பு உயிர்களுக்கு அருள் புரிய வருகையில்தான் அச்சிவம் என்பது தனது திருவருளை வெளிப்படுத்தி இரண்டாகவும் பின்பு பல்வேறு நிலைகளிலும் வருகின்றது என்பதனை,

ஒன்றவன் றானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந் தெட்டே.
(திருமந்திரம்: பா.1)

திருமந்திரம் குறிப்பிடுகின்றது. இறைவன் ஒருவனே என்பதை ஒன்றவன் தானே என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

தன்னிடமிருந்து பிரிப்பின்றி நிற்கும் ஆற்றலை அதாவது அருளை இரண்டெனக் கொண்டுள்ளார். இரண்டவன் இன்னருள் என்பதில் அவனது அருள் இருதிறப்படும் என்ற பொருள்பட அறக்கருணை, மறக்கருணையைக் குறிப்பிட்டுள்ளார். நின்றனன் மூன்றினுள் என்பது இறைவன் இலயம் (அருவம்), போகம் (அருவுருவம்) அதிகாரத்துள் (உருவம்) எனும் நிலையில் நிற்பதைக் குறிப்பிடுகின்றார். நான்கு உணர்ந்தனன் என்பதில் அறம், பொருள், இன்பம், வீடு

என்னும் நான்கனையும் ஏகனாய் இருக்கின்ற சிவனே உணர்ந்து உயிர்கட்கு உணர்த்துபவன் என்று அறிவுறுத்துகிறார்.

ஐந்து வென்றனன் என்பது இறைவன் ஐம்புலன்களை வென்றவன் என்பதை திருமூலர் குறிப்பிடுகின்றார். இஃது,

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்'

எனும் திருக்குறளோடு ஒப்புநோக்கத் தக்கது (திருக்குறள், கடவுள் வாழ்த்து:6), ஏகனாகிய இறைவன் ஐம்புலன்களை வென்றவன் எனும் செய்தியினை, "நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும் வென்றானை என்று திருநாவுக்கரசு அடிகள் திருவீழிமிழலைத் தாண்டகத்தில் குறிப்பிடுவதும் ஒப்பு நோக்கத் தக்கது. (தி.6, பதி.50: பா.3)

ஏகனாய் உள்ள பரம்பொருளின் திருவருளே ஆறாக விரிவதை ஆறு விரிந்தனன் என்கிறார் திருமூலர். அதாவது, மந்திரம். பதம், வண்ணம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறு (அத்துவாக்கள்) வழிகளாக விரிந்தனன் என்பதை உணர்த்துகின்றார். ஏழு உம்பர்ச் சென்றனன் என்பது ஏகனாய் உள்ள சிவமே பிரம உலகம், விட்ணு உலகம், உருத்திர உலகம், மகேசுவர உலகம், சதாசிவ உலகம், சத்தி உலகம், சிவ உலகம் என்னும் ஏழுலகங்களையும் தோற்றுவித்து அவற்றிற்கு மேற்சென்று நிற்பவன் என்பதை உணர்த்துகிறது.

மேற்சென்று என்பது பரசிவமும், பராசக்தியும் சிவமும் அவனின் திருவருளும் தன்னிலையில் உலகமுகப்படாது சும்மாயிருக்கும் சிறப்பு நிலையைக் குறிப்பதாகும். அங்கு ஏகன் தனித்துச் செயல்படாது இருக்கும் சிவத்தை நெஞ்சமே நீ உணர்ந்து எட்டு அல்லது அடைவாயாக என்று குறிப்பிடுகின்றார் திருமூலர்.

திருவாசகம் எனும் தேனினை அருளிய மாணிக்கவாசகர், "ஒருவன் என்னும் ஒருவன் காண்க," (திருவண்டப்பகுதி:வரி:43) எனவும் சிவஞானபோதம் அருளிய மெய்கண்டார், "ஒன்றென்றது ஒன்றே காண்; ஒன்றே பதி"(சிவஞானபோதம், சூத்,2, அதி.1,பா.7) என்று கடவுள் ஒன்று என்று தெளிவுபடுத்துகின்றார். உண்மைநெறி விளக்கம் அருளிய உமாபதி சிவமோ, "ஒடுக்கி ஆக்கிப் பவ்வம்விண்டு, அகலப் பண்ணிப் பாரிப்பான் ஒருவன்" என்று ஒரு கடவுள்தான் இவ்வுலகினை ஒடுக்கவும் தோற்றுவிக்கவும், விரிவாக்கம் செய்து காக்கவும் செய்கின்றான் என்று புலப்படுத்துகின்றார் (உண்மைநெறி விளக்கம், பா.3)

**4. சிவத்தின் ஆற்றலே சத்தியாய் விரிகிறது**

ஏகனாய் நிற்கும் பரம்பொருளிடம் இருந்து வெளிப்பட்ட ஒரு சத்தியே, பெண்ணாக, விந்து சத்தி, மனோன்மணி, மகேசை, உமை, திரு, வாணி என்றாகி நிற்கிறது. அத்திருவருள் தாய்மை இயல்பும் இறைவனை விட்டு வேறுபடாத இயல்பும் என்றும் இறைவனை விட்டுப் பிரியாத இயல்பும் உடையது என்பதனைச் சிவஞான சித்தியார்,

*சத்தியாய் விந்து சத்தி யாய்மனோன் மனிதா னாகி*
*ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி*
*வைத்துறும் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தி யாகும்*
*எத்திற நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்.*
*(பிரமாணவியல் சூத்திரம் 2, பா: 75)*

குறிப்பிடுகின்றது. பெருமானை ஆணாகவும் அவனின் திருவருளைப் பெண்ணாகவும் போற்றி மகிழ்ந்த நம் முன்னோர் சிவையைச் சிவபெருமானின் உடலில் சரி பகுதியாய் வைத்து வழிபட்டு மகிழ்ந்தனர். இக்கரணியம் பற்றியே இறைவன் ஆண் ஒரு பகுதியும் பெண் ஒரு பகுதியும் ஆனான் என்பதனை, 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்" என்று தமிழ்ஞானசம்பந்தர் அருளினார் (திரு:1:10:1).

ஏகனாகிய இறைவனின் திருவருள் அநேகமாக இறைவனுக்கு எல்லாமாக இருக்கின்றது என்பதனைத்தான் திருமூலர்,

*தாரமும் ஆகுவள் தத்துவ மாய்நிற்பள்*
*காரண காரிய மாகும் கலப்பினள்*
*பூரண விந்து பொதிந்த புராதனி*
*பாரள வாந்திசை பத்துடை யாளே*
*(திருமந், தந்.4, ஆதார ஆவேதயம்: பா.25)*

என்று குறிப்பிடுவார். ஏகனாக இருக்கும் இறைவனுக்கு மனைவியாக நிற்கும் திருவருள், அறிவாற்றலாகவும் கலப்பு உலகத் தோற்றத்தின் கரண காரியமாகவும் நிற்கும். அதுவே தூமாயை எனப்படும் வனப்பாற்றலோடு நிறைந்து மறைப்பாற்றலாக அநேகனாகத் திருவருள் நிலை கொண்டு, காலங்காலமாக நிலவுலகத்தை எல்லையாகக் கொண்ட பத்துப் புலங்களுக்கும் அருள் செய்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

**5. சிவமே அநேகமாக வருகிறது**

எனவே சைவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, சிவஆகமங்களிலே சொல்லப்பட்டுள்ள, திருமுறைகளிலே இயம்பப்பட்டுள்ள, பல்வேறு பெண், ஆண் கடவுளர் வடிவங்கள் அனைத்தும் ஒன்றாய் இருக்கின்ற பரம்பொருளின் திருவருளையே குறிக்கும். மேலும் ஏகனாகிய இறைவன் பிறப்பு இறப்புக்கு உட்பட்டுத் துன்பப் படாதவன் என்பதை,

"யாதொரு தெய்வம் கொண்டிர் அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்; மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும்; பிறக்கும்; மேல்வினையும் செய்யும்;
ஆதலால் இவை இலாதான் அறிந்து அருள் செய்வன் அன்றே"
(சிவஞானசித்தியார், பா.115)

என்று அருணந்திசிவம் அருளிச் செய்துள்ளார். இதனையே, "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" என்று மணிவாசகரும் திருவாசகத்தில் குறிப்பிட்டுகின்றார் (சிவபுராணம், வரி:6). எனவே, சைவர்களுக்குக் கடவுள் ஒன்றே! பல்வேறாகத் தோன்றுவது அவ்வொரு பரம்பொருளின் அருள் வடிவங்களே என்பது தெளிவாகிறது.

எல்லா உலகங்களையும் உயிர்களையும் தனது திருவருளான சத்தியை வெளிப்படுத்தி நடத்துவிக்கின்ற ஏகனாகிய சிவம் ஏன் அவ்வாறு செய்கின்றது எனும் கேள்விக்குத் திருவருட்பயன் பதில் அளிக்கின்றது.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்"
(திருவருட்பயன், குறள்வெண்பா 2)

நிலைபெற்ற உயிர்கள் தங்களின் மலம் நீங்கிய பேரின்ப நிலையாகிய ஒப்பற்ற நிலையை அடையவே உயிர்களுடன் பொருந்தக் கூடி அவ்வாறு அருளுகின்றான் என்கிறது திருவருட்பயன். அவ்வாறு அருளுகின்ற சிவன், தன் திருவருட்சத்தியுடன் பிரிப்பின்றி ஒன்றாய் இருந்து அருளுகின்றான் என்று மேலும் அது விளக்குகின்றது.

திருவருளை அம்மையாகக் குறிப்பிடும் திருமூலர், நான்கு திசைகளிலும் வாழும் உயிர்களுக்கு நல்ல அருள் புரியும் அம்மைக்குத் தலைவன் சிவன் என்பதை, "நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கு நாதனை," என்று குறிப்பிடுகின்றார் (திருமந்திரம்:கடவுள் வாழ்த்து,பா:2). சிவனும் சிவனின் திருவருளுமே உலகையும் உலக உயிர்களையும் பேணிக்காப்பதனால் சிவனையும் அவனின் திருவருளையும் உயிர்களுக்கும் உலகங்களுக்கும் அம்மை அப்பர் என்பர். இதனை, "அம்மை அப்பரே உலகிற்கு அம்மை அப்பர்" என்று திருக்களிற்றுப்படியார் குறிப்பிடும் (திருக்களிற்றுப்படியார், பா:1).

ஏகமாய் இருக்கின்ற பரம்பொருளே அப்பனும் அம்மையுமாக இருப்பதோடு மட்டும் அல்லாமல் அநேகமாய் இருந்து அருள் செய்கின்றது எனும் கருத்தினை நாவுக்கரசுப் பெருமானும் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுவார்

"அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ,
அன்புடைய மாமனும் மாமி யும்நீ,

ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ,
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ,
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ,
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ,
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் து(ம்)நீ,
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே''

(திருமுறை 6: பா:95)

ஏறூர்ந்த செல்வனான ஏகனே எனக்கு அப்பனும் அம்மையும் தமையனும் அன்புடைய மாமனும் மாமியும் ஒப்புடைய மனைவியுமாக இருந்து அருள் செய்கின்றது என்கின்றார் திருநாவுக்கரசர். ஏகனாகிய பரம்பொருளின் திருவருளே அநேகமாகி ஒள்ளிய செல்வமாகவும் குலமாகவும் சுற்றத்தவராகவும் நிலையாக நின்று வாழும் ஒப்பற்ற ஊராகவும் நுகர்ச்சிப் பொருள்களாகவும் ஊர்தி வகைகளாகவும் பொன்னாகவும் மணியாகவும் முத்தாகவும் எனக்குத் துணையாய் உடனின்று அருள் செய்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

தனக்கு ஒப்பு இல்லாத் தலைவனான, பரம்பொருளை வழிபடுதலே தமிழ்ச் சைவர்களின் உண்மையான மெய்யறிவு வழிபாடு ஆகும். சைவநெறியின் முழுமுதற் பரம்பொருளான, தனக்கு ஒப்பு இல்லா ஏகனான சிவனை வழிபட்டால் மட்டுமே இன்ப துன்ப நுகர்ச்சிகளினால் ஏற்படும் மனக்கவலையை அளிக்கும் பிறவியை அறுக்க இயலும் எனும் கொள்கையைத்,

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

(திருக்குறள், கடவுள் வாழ்த்து:7)

என்று திருவள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.

**7. சிவத்திற்கும் பிறவற்றிற்கும் உள்ள வேறுபாடு**

இயற்கையை வழிபடுதல், முன்னோர்களை வழிபடுதல், காவல் தெய்வங்களை வழிபடுதல், ஊர்த்தெய்வங்களை வழிபடுதல், போரில் மாண்ட வீரர்களை வழிபடுதல், சிறுதெய்வங்களை வழிபடுதல், குலதெய்வங்களை வழிபடுதல் போன்றவை தமிழர் வழிபாட்டு முறைகளில் மேலோங்கி நின்று அவை ஏகனாக இருக்கின்ற பெருமானின் அநேக வடிவங்கள் என்று ஒப்புமை காட்டுவது ஏற்புடையது அல்ல என்று சைவ சமயச் சந்தானக் குரவர் அருணந்திச் சிவம் குறிப்பிடுகின்றார். தனக்கு உவமை இல்லாத இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள வேறுபாட்டினை விளக்குகின்றார்.

''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகிஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள்
வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதலான் இவைஇ லாதான் அறிந்துஅருள் செய்வன் அன்றே!

(சிவஞான சித்தியார், பா.25)

எந்தத் தெய்வத்தை வணங்கினும் அத்தெய்வத்தின் வழி மாதொருபாகனாகிய சிவனே வந்து அவற்றின் உள் நின்று அருள்செய்வான். பரம்பொருளைத் தவிர்த்தப் பிறதெய்வங்கள் யாவும் உயிர்களே ஆகும். ஆகையால் அவை வினைகள் செய்யும். அவை நம்மைப் போன்றே இன்ப துன்பத்தை அனுபவித்து அந்நுகர்ச்சிகளினால் தாக்குறும். அத்தெய்வங்கள் நம்மைப் போன்றே மீண்டும் மீண்டும் இறப்புக்கும் பிறப்புக்கும் உள்ளாகும். ஆனால் எல்லாம் வல்ல ஏகனாகிய இறைவனுக்கு இக்குறைபாடுகள் இல்லை என்பதால் உயிர்கள் செய்த நல்ல செயல்களையும் தீய செயல்களையும் அறிந்து அதற்கு ஏற்ப பயனைக் கொடுக்க வல்லவன் அந்த ஏகன் ஒருவனே ஆவான் என்று குரிப்பிடுகின்றார்.

பிறந்து இறக்கும் உயிர் வகைகளை இறைவனே அவற்றின் உள்நின்று இயக்கினாலும் அவை ஒருபோதும் இறைவன் ஆக முடியாது என்பதும் உணரத் தக்கதாய் உள்ளது. தாவரங்கள், விலங்குகள், பறவைகள் போன்ற உயிரினங்கள் ஒருபோதும் ஏகனாகிய பரம்பொருள் ஆக முடியாது என்று சிவஞான சித்தியார் அறிவுறுத்துகின்றது. மாந்தர்களாகிய அடியார்களும் சமய ஆசான்களும் ஏகனாகிய சிவத்தை நினைப்பிக்கின்ற சிவவேடம் தாங்கியவர்களே ஆவர். அவர் ஒருபோதும் ஏகன் ஆகிய சிவம் ஆக முடியாது என்பது சிவஞான சித்தியாரின் கருத்து.

**8. சிவகுருவிற்கும் சீவன்முத்தருக்கும் உள்ள வேறுபாடு**

ஏகனாகிய சிவம் சிவகுருவாய் வந்து பக்குவமுடைய உயிர்களுக்குச் சிவ அறிவினை அளித்து, அவ்வடியார்களைச் சிவமாம் தன்மை அடையச் செய்யும். அவ்வாறு சிவமாம் தன்மை அடைந்தவர்களின் அறிவும் செயலும் தற்போதம் நீங்கிய சிவன் செயலாய் அமையும். அந்நிலையில் அவர்கள் செய்யும் செயல்கள் சிவன் செயலாய் அமையும். அதற்கான மேல்வினைப்பயனைப் பெருமானே ஏற்றுக் கொள்வான் என்பதைச் சைவ மெய்கண்ட நூல் திருகளிற்றுப்படியார் குறிப்பிடுகின்றது.

“ஆற்றால் அலைக்கடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை
மாற்றிஅவ் வாற்றால் மறித்தால்போல்-தோற்றிப்
புலன்கள் எனப் போதம் புறம்பொழியும் நம்தம்
மலங்கள் அற மாற்றுவிக்கு வந்து”
(திருகளிற்றுப்படியார், பாடல்:11)

இவ்வாறு ஏகனாகிய சிவத்தின் சிவ அறிவினைப் பெற்றவர்கள் நிகழ்த்தும் அருள் நிகழ்ச்சிகள், சிவம் அவர்களின் மேல் நின்று ஆற்றுபவையேயன்றி அது அவர்களின் செயலாகாது என்பதை,

“பாலைநெய்தல் பாடியதும் பாம்பு ஒழியப் பாடியதும்
காலனை அன்று ஏவிக் கராம்கொண்ட-பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நம்தம்

கரணம்போல் அல்லாமை காண்''
(திருகளிற்றுப்படியார், பாடல்:12)

என்று திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் திருகளிற்றுப்படியாரில் குறிப்பிடுகின்றார். எனவே திருஞானசம்பந்தர் பதிகம் பாட பாலை நிலம் நெய்தல் நிலமாக மாறியது, பாம்பு தீண்டிய வணிகனின் விடம் நீங்கியது, நம்பி ஆரூரர் அவிநாசியில் முதலை உண்டப் பாலகனை மீண்டும் உயிர் பெற்று வரச் செய்தது போன்ற அருட்செயல்கள் ஏகனாகிய சிவன் செயலாகவே நடந்தன என்று திருகளிற்றுப்படியார் விளக்குகின்றது. சிவனருட்செல்வர்களின் கருவிக் கரணங்கள் சிவக்கரணங்களாக நின்று செயல்பட்டவை என்று மேற்கண்ட திருகளிற்றுப்படியார் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

திருகளிற்றுப்படியாரின் கூற்றுப்படி சிவ அறிவினைப் பெற்றச் சிவனடியார்கள் சிவமாம் தன்மைப் பெற்றவர்களே அன்றி அவர்கள் ஏகனாகிய சிவம் அல்ல என்றும் புலப்படுகின்றது. எனவே சிவமாம் தன்மை பெற்ற அடியார்கள் ஏகனாகிய சிவத்திடத்து அடிமைப் பூண்டு சிவத்தை நினைப்பிக்கின்றவர்களே அன்றி சிவத்தின் அநேக வடிவங்களில் ஒன்றாய் ஆதல் கிடையாது என்று புலப்படுகின்றது. இதன் வழி ஏகனாகிய சிவமும் சிவ அறிவுப்பெற்ற ஆசான்களும் வேறு என்பதனைத் திருகளிற்றுப்படியார் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இதன் வழி தனிமாந்த வழிபாடு என்பதும் ஏகன் அநேகனாகி வரும் பரம்பொருள் வழிபாடு என்பதும் ஒன்றல்ல என்பது தெளிவாகிறது.

### 11.சிவத்திற்கும் அட்ட மூர்த்தத்திற்கும் உள்ள வேறுபாடு

இறைவன் ஒருவனே, நிலமும், நீரும் தீயும், வாயுவும், பெரிய ஆகாயமும், சந்திரனும் சூரியனும், அறிவுருவாய ஆன்மாவும் என்னும் எட்டு வகைப் பொருள்களாய் (அட்டமூர்த்தம்) அவற்றோடு கலந்து இருப்பவனாய் ஏழுலகங்களும் திக்குகள் பத்தும் ஆகப் பல பொருள்களாக நின்ற வகையைப் பாடி நாம் தோணோக்கம் ஆடுவோம் என்பதனை மாணிக்கவாசகர்,

''நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ''
(திருவாசகம், திருத்தோணோக்கம்:5)

என்று குறிப்பிடுவார். நாவுக்கரசரோ ஏகனாகிய சிவன்,

''இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்

பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந்தாமே
யாகி, நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே”

என்று குறிப்பிடுகின்றார் (திரு:6,94:1).

பெரிய பூமியாகியும் தீயாகியும் நீராகியும் உயிராகியும் எறியும் காற்றாகியும் அழிவில்லாத நிலையை உடைய திங்களாகியும் ஞாயிறாகியும் ஆகாயமாகியும் இங்ஙனம் அட்ட மூர்த்தியாகியும் பெருமை உடையதாகிய நன்மையும் சிறுமை உடையதாகிய குற்றமும் பெண்ணும் ஆணும் ஏனைய தேவருடைய வடிவங்களும் அருவம் உருவம் அருவுருவம் என்னும் தம் மூவகைத் திருமேனிகளும் தாமே ஆகியும் நேற்று ஆகியும் இன்று ஆகியும் நாளை ஆகியும் நீண்ட செஞ்சடையுடைய எம்பெருமான் நின்றவாறு வியக்கத் தக்கது ஆகும் என்கிறார்.

உயிர்களின் பொருட்டு இறைவன் தோற்றுவித்து உள்ள எல்லாப் பொருள்களிலும் இறைவனின் திருவருள் கலந்து இருப்பதை மேற்கண்ட நாவுக்கரசர் மற்றும் மாணிக்கவாசகரின் பாடல்கள் குறித்து நின்றாலும் அவை பெருமானின் அநேக வடிவங்களில் ஒன்று அல்ல என்று தெளிவாகிறது. ஒருபுடை உவமையாக அவையும் இறைவனின் அருவுருவங்களாகக் குறிப்பிடப்படினும் அவை எல்லாம் வல்ல, இயற்கை அறிவினனான, முற்றறிவினனா இறைவன் அல்ல! இறைவனின் அநேக வடிவம் அல்ல என்பதத் தெளிவுபடுத்துகின்றது.

**முடிவுரை**

முடிவாக ஏகன் அநேகன் என்று திருமுறைகளும் சைவ மெய்கண்ட நூல்களும் குறிப்பிடும் இறைவனின் ஏகன் அநேகன் எனும் கருத்தானது ஒன்றாய் உள்ள இறைவனின் பல்வேறு வடிவங்களை மட்டுமே குறித்து நிற்கின்றது என்று தெளியப்படுகின்றது. இறைவனின் திருவருள் கலந்துள்ள எட்டுப் பொருள்களான உயிர்கள், கதிரவன், நிலவு, பஞ்சப் பூதங்களிலான அனைத்துப் பொருள்களும் இறைவனின் திருவருளைத் தாங்கி இருக்கும் வேறு பொருள்களேயன்றி அவை ஒருபோதும் ஏகன் அநேகனாகி நிற்கும் இறைவன் அல்ல என்று தெளியலாம். பிறப்பு இறப்பிறகு உட்படும் எல்லா வகையான உயிர்களும் வணக்கத்திற்கு உரியவையே அன்றி வழிபாட்டிற்கு உரியவை அல்ல. பரம்பொருள் ஒன்றே வழிபாட்டிற்கு உரியது என்பது தெளிவாகிறது.

## Reference

*Tirumurai 1 Tirunyanasambantar Thevaram* (1997). Chennai: Nyanasambantham Publication.Dharumai Mutt

*Tirumurai 4 Tirunavukarasar Thevaram* (1997). Chennai: Nyanasambantham Publication.Dharumai Mutt

*Tirumurai 6 Tirunavukarasar Thevaram* (1997). Chennai: Nyanasambantham Publication.Dharumai Mutt

*Tirumurai 8 Manivacakar Tiruvacakam* (1997). Chennai: Nyanasambantham Publication.Dharumai Mutt

*Tirumurai 10 Tirumoolar Tirumantiram* (1997). Chennai: Nyanasambantham Publication.Dharumai Mutt

*Periyapuranam* (1999). Chennai: Ganggai BookStore.

*Thiruvarutpayan* (1976).Chidambaram. Sivagami Publication.

*Tirukkural* (1998). Chennai: Appar Publication.

*Sinyana Sittiyar* (1914). Madurai: VivegaBanuPublication. Tiruvavaduthurai Mutt.

*Unmai Neri Vilakkam* (1998). Chennai: Appar Publication.

*Tirukalitrupadiyar* (1969). Madurai: VivegaBanuPublication. Tiruvavaduthurai Mutt.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com